உ

சிவமயம்.

சேனைத்தலைவர்

மரபுவிளக்கச்சூறாவளி.

இஃது

இயற்றமிழ்ப்போதகாசிரியராகிய

நரசிங்கபுரம்

ஸ்ரீ௳ஸ்ரீ

வீராசாமிமுதலியார் அவர்கள் இயற்றி

சாலிவாகன சகாப்தஞ் கஎஎ௬-ல்

அச்சிட்ட பிரதிக்கிணங்க

காஞ்சிக்கடுத்த பனைப்பாக்கம்

போ-வே. எல்லப்பமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

சிதம்பரம்

அ-இரத்நசபாபதிமுதலியாரால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1888.

ROJA MUTHIAH,
KOTTAIYUR—623 103

Digitized by RMRL

பதிப்புவாலாறு.

ஒருநூலை ஒருவர் இயற்றப் புகுமிடத்துச் [சுருதி யுக்தி அநுபவம் என்னும் மூன்றற்கும் பொருந்தவியற்றுவதே முறையாம். அங்ஙனமின்றி மனம்போனவாறே இயற்றுவது வழுவாம்.

சுருதிமுதன் மூன்றற்கும் மாறுகாது தொன்றுதொட்டு வரும் செங்குந்தரென்னும் பெயரினையுடைய மரபினராயுள்ள சேனைத்தலைவர்க்கு மாறாக, இலைவணிகரென்னும் மரபினர் தாமே சேனைத் தலைவரென்னும் பெயர்க்கு உரியவரென்று நவீனவழக்குத் தொடுப்பாராயினர். அவ்வழக்கைச் சாதிக்குமாறு அவர் எடுத்த சாதனங்களோ மிக்க துர்ப்பலமுடையன. என்னை! சாதிமுறைக்கிரமம் தவறுமற் காக்கப்பட்டுவந்த காலமாகிய சோழராசர் காலத்திலே அவர்சபையிலே சிரச்சிங்காசனமிட்டு அதன்மீது வீற்றிருந்து வீரவாகுமுதலிய நவவீராது மரபினர் செங்குந்தரேயென எடுத்துப்புகழ்ந்து பிரபந்தஞ் செய்த ஒட்டக்கூத்தரை நோக்கி, நவவீரர் மரபினர் இலைவணிகராயிருக்க நீர் செங்குந்தர் என்று எடுத்துக்கூறிய தென்னையென்று கடாவாது அவர் கூற்றை அரசன்முதலிய யாவரும் அங்கீகரித்தன ராதலாலும், இலைவணிகர்-பூவணிகர்-நெய்வணிகர் - எனப் பல்திறவணிகர் இற்றைக்காலத்து நவீனசாதியாகாது சோழராசர் காலத்தும் உள்ள சாதியாளரா யிருத்தலாலும், இலைவணிகர் தாம் அந்நவவீரர் மரபினரென்பது உண்மையாயின் அக்காலத்தில் அவ்வரசன் சபையிலேயே எதிர்வாதிட் டழித்திருப்பாராதலாலும், சேனைத்தலைவரென்னும் உரிமையும் செங்குந்தரென்னும் பெருமையும் நவவீரர் தம் மரபினரே யென்னும் உண்மையும் இலைவணிகர்க்குச் செல்லாவாம். பண்டுதொட்டு இன்றளவும் பிரபல குகாலயங்கள் தோறும் நடந்தேறிவரும் சூரசம்மார உற்சவங்களிலே சுவாமிக்கு முன்னே சேனைத்தலைவராக வேலேந்தி வீராவேச வேஷதாரிகளாகநின்று உற்சவம் சிறப்பித்துவரும் வழக்கம் இலைவணிகர்க்கு எக்காலத்தும் எவ்விடத்தும் இருந்ததுண்டா? இல்லையே: ஆதலால் இலைவணிகர் கூறுஞ் சாதனங்கள் போலிச் சாதனங்

களாய்ப் பெருஞ்சூறையை யெதிர்ந்த பூளையாயினமை இந்நூலுட்காண்க.

செங்குந்தர் மரபை விளக்கும் பொருட்டு முன்னோராலியற்றப்பட்ட **எழுப்பெழுபது** முதலிய அநேக நூல்களைப் பின்னர்க்காலத்துப் பிரகடனஞ்செய்வா ரின்மையாலன்றோ, சேனைத்தலைவர் **மரபுவிளக்கம்** என்னும் ஆபாசப்பொய்ந்நூல் தோற்றுதற்கும் இலைவணிகர் சேனைத்தலைவர் எனத் தம்மைத்தாமே கூறிக்கொள்வதற்கும் இடமாயிற்று. ஆதலால் செங்குந்தப் பிரபுக்களாயுள்ளவர்கள் சுசாதியபிமான முடையராய்த் தம் மரபுநூல்களை எடுத்துப் பிரகடனஞ்செய்து தங்குலத்தைப் பரிபாலிக்க விரும்புகின்றோம். அங்ஙனஞ் செய்யாது போவரேல் இக்காலத்தில் எக்காலத்துமில்லாத சமயப்புரட்டர் சாதிப்புரட்டரோடு கவிப்புரட்டரும் காவியப்புரட்டரும் எண்புரட்டரும் எழுத்துப்புரட்டரும் சில ரிருந்ததன்றி, போதாக்குறைக்கு இன்னுஞ்சிலரிருக்கின்றனர். இவரால் மேற்கூறிய சமயமுதலியவனைத்தும் வெகுவாய்ப் புரட்டப்பட் டிருப்பதன்றி, அவற்றைக்கண்டு வாதிப்பவரின்மையால் இன்னு மப்புரட்டுகள் வெகுவாய் விளைகின்றன. ஆதலால் இலைவணிகர்தானோ? இன்னும் அவரிற் றாழ்ந்த குலத்தவர்களும் தாங்களே செங்குந்த ரென்றும், செங்குந்தரென்போர் சேனைத்தலைவர் அல்லரென்றும் போலி வாதிடத் தலைப்படுவர் என்பதில் ஐயமில்லை. வெள்ளம் வருமுன் அணைகோலுவதே தகுதி. வந்தபின் தேடுவமென்பது பெருந்துன்பத்துக்கும் பொருள் நட்டத்துக்கு மேதுவாகும். நம்முன்னோர் நமது மரபின்பொருட்டு கொடுத்தற்கரிய எத்தனை தலையைக் கொடுத்தனர்? அதனினும் பொருள் சிறந்ததாமா? நல்விடயத்தில் அற்ப பொருட்செலவுக்கு அஞ்சி வீண் விஷயங்களின்மாத்திரம் வாரியிறைக்கும் இயல்புகொண்டு பெரிதும்அரிதுமாகிய நங் குலப்பெருமையை விடுவது விவேகமாகுமா? பிரபுக்களே! சற்றே சிந்தியுங்கள். சிறிது அபிமானியுங்கள். சிந்தித் தபிமானித்து இதுகாறும் வெளியாகாத ஏனைய புத்தகங்களையும் அச்சிட முயற்சிசெய்யுங்கள்.

இங்ஙனம்.

சி. அ. இ.

Digitized by RMRL

சாற்றுக்கவிகள்.

காஞ்சீநகரம்.
சைவசித்தாந்தவேதாந்தஞானாசாரியராகிய
கற்பகவள்ளலார்மரபில்வந்த
சட்டைநாததேசிகர் பௌத்திரரும்
சாமிநாததேசிகர் புத்திரருமாகிய
இராமலிங்கதேசிகரால்
செய்யப்பட்டது.

விருத்தம்.

வளங்கொளச்சே னைத்தலைவர் மரபுவிளக் கச்சுரு வளியெ
ன் றோர்நூல், விளங்குநர சிங்கபுரம் வீராசா மிப்புலவன் விள
ம்பினுனற், குளங்கொள்விழிப் பெருமான்றன் கோயிலினுட்
பலிபீடக் குலவைப் புற்றே, உளங்கொளுநற் குணமுடையோர்
பிறர்க்கைய மறவுரைக்கு முறையின் மாதோ.

காஞ்சிநகரம்.

சைவசித்தாந்தவேதாந்த ஞானசாரியராகவிளங்கிய
மெய்கண்ட சிவாசாரியார் மரபில்வந்த
முத்துக்குமாரதேசிகர் புத்திரராகிய
திருவூறல் - விநாயகதேசிகரால்
செய்யப்பட்டது.

கட்டளைக் கலித்துறை.

பேரார்செங் குந்தர் பெருமை மிகப்பிர காசிக்கவே
தாராருஞ் சேனைத் தலைவர் மரபு விளக்கத்திற்குச்
சீரார்சு ருவளி செய்தா னெழினர சிங்கபுரம்
வீரா சுவாமிக் கவிவாணன் யாரும் வியப்புறவே,

விருத்தம்.

செய்க்கமலஞ் சூழுநர சிங்கபுரம் வாழ்வீரா சாமி வாணன், மெய்க்கந்தர் புராணமுத லுணர்ந்தறிவாற் செங்குந்தர் மேன் மை யோங்கத், தக்கசே னைத்தலைவர் மரபுவிளக் கச்சூறு வளி தக் தானுல், கைக்கனியா மலகமெனக் கவினுறொலாங் கண்டுமெ னங் களிக்கத் தானே.

களத்தூர்
தமிழ்ப்புலமை-வேதகிரிமுதலியாராற்
செய்யப்பட்டது.

விருத்தம்.

பூதலத்திற் செங்குந்தர் நவவீரர் மரபென்றே புராணவாறு, ஓதுநர சிங்கபுரம் வீராசா மிப்புலவ னுமைமெய் யென்றே, ஆதிசிவன் மழுவெடுத்தா னணிதிருமா னெய்யினிற்கை யஞ்சா திட்டான், போதுறையு நான்முகனு நித்தியமாச் சத்தியத்திற் புகுந்திட் டானே.

சத்தியவேட்டி-தமிழ்ப்புலமை
சென்னை - கேசவவுபாத்தியாயராற்
செய்யப்பட்டது.

விருத்தம்.

தாட்கொண்மலர்ப் பொய்கைநர சிங்கபுரம் வாழ்வீரா சா மிவாணன், வாட்கொள்சே னைத்தலைவர் மரபுவிளக் கச்சூறு வளியென் றோர்நூல், ஆட்சியா னனுபவத்தா னறிவுடையோ ருணர்த்தியவா கமத்தான் மற்றைக், காட்சியா னுலகரிஃ தண் மையெனச் சாட்சிபெறக் கழறினனே.

Digitized by RMRL

சிவமயம்.

சேனைத்தலைவர்

மரபுவிளக்கச்சூறுவளி.

காப்பு.

நேரிசைவெண்பா.

தளிர்த்துவருஞ்சேனைத்தலைவர்மரபு
விளக்கச்சூறுவளிவிளம்பத்—துளக்கமறு
செம்பவளவாயுமையாள்சிந்தைமகிழ்ந்தேயளித்த
கம்பவளக்குஞ்சரமேகாப்பு.

கலிவெண்பா.

வேதமொருநான்கும்வியந்தேத்தும்வெள்ளிமலை
மாதுமையாள்பங்கன்மகிழ்ந்தளித்த—போதமிகு
கந்தவேட்கெம்பியராக்கன்னியுமைகாற்சிலம்பின்
சந்தமணிமாதர்தரத்தரையில்—விந்தையொடு
வந்தவவீரர்மரபார்செங்குந்தரொன்றே
எந்தவுலகுமினிதுணரச்—சந்ததமுங்
காந்தமுதலாக்கருதுபுராணங்களெலாம்
ஓர்ந்துரைக்கவீண்டவர்தம்மொண்சரிதைப்—பார்தமெலாங்
காதல்கொளுங்குள்ளாண்டிக்கச்சிச்சபாபதியென்
றோதுமிலைவாணிபர்தாமுட்கருதிப்—போதுகலி
நாலாயிரத்துத்தொளாயிரத்துநாற்பத்து
நாலாம்வருடநடந்ததற்பின்—மேலாண்டிற்
றிண்மைபெறுந்தெலுங்குதேசத்தினுள்ளவராற்
கண்மைபெறுங்கூறுக்குக்காரொன்றும்—வண்மை

புலப்பட்டதென்பாற்புகழ்தமிழ்நாட்டாரால்
இலப்பட்டிலைவணிகரொன்றுஞ்—சொலப்பட்ட
தம்மரபுக்கென்றேதமிழ்க்கலிவெண்பாவதனால்
அம்மவுரைத்தாரகமகிழ்ந்தே—இம்மகியிற்

செங்குந்தருண்டென்னுஞ்சிந்தையுடையாரொன்னிற்
றங்கும்படியந்நூற்றாமியற்றார்—அங்கதற்குங்
காட்சியளவின்றேகருதலளவின்றே
ஆட்சிபெறுநூலளவின்றே—சாட்சியொடு

திட்டாந்தங்காட்டித்தெரிவிக்கினென்றாலும்
பட்டாங்கெனலாமிப்பாரிலொரு—திட்டாந்தம்
இல்லாமலேயவ்விலைவணிகரிவ்வுலகின்
எல்லாருங்காணவியல்பின்றிச்—செல்லாத

வெம்மையினாற்பொய்ந்நூல்விரித்ததுதான்வேற்றொருவர்
செம்மைபெறுங்காணியெலாஞ்சென்றெடுத்துத்- தம்மதென்று
பொய்ப்பத்திரமெழுதிப்பூவுலகிற்சிற்சிலர்கள்
கைப்பத்திரஞ்செய்கணக்கென்கோ—மெய்க்குறியுட்

கொண்டொருவன்வேறோர்குலமனையையாற்றினிடைக்
கண்டுவழக்கிட்டகதையென்கோ—பண்டுலகிற்
சிங்கமுறுகுகையைச்சேர்ந்தநரித்திரள்கள்
தங்குகையென்றோதுந்தரமென்கோ—பொங்குமிந்திர

சாலவித்தையென்கோசழக்குடையோர்க்கேற்றகலி
காலவித்தையென்கோகண்கட்டென்கோ—ஏலவினி
ஏசுறுபன்மாயையினுளெம்மாயையீதென்கேன்
வீசுமிரவிகுலவேந்தனெனும்—வாசமுகிற்

கொல்லிமலையான்குலவியபொன்னித்துறையான்
சொல்லரியசீர்த்திபெறுஞ்சோணாடன்—நல்லமலர்ப்
பொன்னாருறந்தையான்போற்றுங்கோரப்பரியான்
றன்னேரிலாதமததந்தியான்—மின்னாரும்

ஆத்திமலர்மாலையானம்புவியிற்பாவலர்கள்
ஏத்தியபாமாலையினிதணிந்தோன்—மாத்தரங்க
வாரியொலிபோன்முழங்கும்வண்மைதிகழ்மும்முரசான்
பாரினுயர்த்தும்புலிப்பதாகையான்—சீருயர்ந்த

Digitized by RMRL

ஆணையினானெவ்வுலகுமாண்மைசெலுத்திவருங்
கோணலிலாச்செல்வமிகுகோவேந்தன்—வேணிகரான்

மாதர்சிதமுமடலெழுதுமார்பினான்
நீதிவழாதமநுநெறியான்—ஓதி

மகுடமுடிமண்டலிகர்வந்துவணங்கச்
செகமுழுதுமோச்சியசெங்கோலான்—பகலிரவும்

வெண்ணிலவுதும்பையணிவேணியரன்றாள்பணிந்து
கண்ணிமையைப்போலுலகங்காத்தளித்த—புண்ணியவான்

சோழமகாராசசுமுகன்சமூகத்தில்
வாழுமியற்றமிழ்சொல்வண்புலவர்—சூழுமெழிற்

செந்தமிழையெட்டுத்திசையினடாத்திவரும்
உந்துகடலுண்டமுனிக்கொப்புடையார்—சந்ததமும்

அன்னங்கள்செங்கமலத்தாருமகன்பணைகண்
மன்னும்பெரியமணவூர்வாழ்—தந்நிகரிற்

கூத்தனெனும்பாவாணர்கூறுலகிலோங்கியநாண்
மாத்திரள்செங்குந்தர்மணமகிழ்ந்து—சீர்த்தியுள

நங்குலத்துக்கோர்நூனவிற்றுகெனநாவலரும்
நங்குலநாமேத்தனலமன்றென்ன—அங்கதனுக்

குள்ளமுவவாதுகொல்வானோடிவரவப்புலவர்
பொள்ளெனவோரந்தணனிற்புக்கியிட—உள்ளிருந்த

சோமாசியாண்டான்றுணிவுற்றொருமகவை
நாமாசைநண்ணாதுநல்கியின்சொற்—கோமானைக்

காக்கிற்புவிமேற்கனபுகழைக்கொள்வமெனத்
தூக்கிப்புவனையிலத்தூய்மறையோன்—மாக்கலைகள்

ஓதியசேயைப்பேழைக்குள்வைத்தவ்வாணனெனச்
சாதனையாற்செப்பித்தூக்கொண்டு—போதவே

ஆர்த்தோடியாங்கவர்களப்பேழையைத்திறந்து
பார்த்தேவியந்துபயந்தடியைப்—பேர்த்தங்கு

மீட்டும்புவனையிலவ்வேதியன்பாற்சென்றுபழி
நாட்டுதமந்நாவலனைநன்கெமக்குக்—காட்டுமந்தக்

கூத்தன்றனக்குநாங்கூற்றுவர்காணென்றுரைக்கச்
சாத்திரங்கடேர்ந்ததனிமறையோன்—கூத்தரது

சிந்தையெண்ணமோர்ந்துதிருச்செங்குந்தரைநோக்கி
இந்தப்புலவருளமின்புறவே—அந்தமிகு

தாய்க்குத்தனியர்தலைச்சிறுவர்கல்விசெல்வம்
வாய்க்குறுமதகுலமாமைந்தர்—தூய்க்குணத்தோர்

ஆயிரத்தெண்மர்சிரத்தாலாதனமிட்டுத்
தூயதமிழ்கேட்கத்துணிவீரோற்—பாயிரநூல்

கேட்பீரெனமறையோன்கீர்த்திபெறுஞ்செங்குந்தர்
நாட்பாராதக்கணமேநல்கியிட—வேட்கையொடு

வேதம்படித்தல்படிப்பித்தல்வேள்விசெயல்
ஏதமறச்செய்வித்தலீதலோ—டீதலைத்தாம்

ஏற்றலெனுந்தொழிலையெக்காலமுமினிதாய்
ஆற்றுபுகழாற்சிறந்தவந்தணருஞ்—சாற்றரிய

ஓதன்மகஞ்செய்தலோம்புதலீதற்படைகள்
போதப்பயிறலிகற்போர்செய்தல்—ஓதுறுமிவ்

வாறுதொழிற்காவலருமவ்வாறியல்பெருகக்
கூறும்வசியகுலத்தவரும்—வீறுகின்ற

வேளாண்குலத்தில்வருமேண்மையருஞ்சூழ்ந்திலங்க
வாளாண்மைமிக்கவலியுடையோர்—நீளாண்மை

சொல்லுங்குலோத்துங்கச்சோழன்றிருமுன்னர்
வல்லமையினாலேவழங்கியவர்—நல்லசிரச்

சிங்காதனத்திருந்துசிந்தைமகிழ்ந்தெவ்வெவரும்
அங்காதரவினைக்குளிரத்—துங்கமிகு

விண்ணினமரர்விடாதுமலர்மாரி
மண்ணிற்சொரிந்துமிகவாழ்த்தெடுப்ப—எண்ணரிய

ஈட்டியெழுபதெனவின்புறுதஞ்சாதிநூல்
நாட்டிவைத்துப்பின்னரவர்நல்குசிரம்—வாட்டமற

ஒட்டும்படிக்கோரெழுப்பெழுபதென்றொருநூற்
கட்டுரைத்தேநற்கலைகள்கற்றோரால்—இட்டமொடு

கூறுதமிழொட்டக்கூத்தனெனப்பேர்பெற்றார்
வீறுமவர்கீர்த்திவியனுலகிற்—றேறுகலை

கற்றவரெல்லாமறிவார்கைக்கனிபோற்கல்லாத
மற்றவருங்கேள்வியுற்றுவாழ்கின்றார்—எற்றிவர்தாஞ்

Digitized by RMRL

சற்றுமறிந்தாரிலையேதண்டமிழ்நூற்சிற்சிலதாங்
கற்றுமிதுதேருக்கருத்தென்னே—சொற்றவிவை

அன்றியுஞ்செங்குந்தர்புராணங்கோவையூசலொடு
துன்றியபிள்ளைத்தமிழுஞ்சொன்மாலை—நன்றிகொளும்

வாக்குலாவும்பரணிவாய்மைத்திருப்புகழ்சேர்
நோக்குலாவாதியவிந்நூலெல்லாம்—ஆக்கமிகு

செங்குந்தரோகயிலைச்சீர்மரபார்செம்மைபெறு
செங்குந்தரோமெய்ச்சிவகுலத்தார்—செங்குந்தர்

தாமேநவவீரர்சந்தியார்செங்குந்தர்
தாமேநற்சேனைத்தலைவராம்—மாமேரு

வல்லானையொத்ததிறல்வல்லானைவென்றுயர்ந்தார்
கல்லானைதின்னக்கரும்பளித்தே—எல்லாமும்

வல்லசித்தராகிமதுராபுரியிலன்று
நல்லவித்தைகாட்டிநலஞ்சிறக்கத்—தில்லையிடை

நீண்டகனகசிருத்தமணிமண்டபத்தே
தாண்டவஞ்செய்மாதேவர்தம்மிடத்தும்—ஈண்டுயிர்கள்

சேயாகிவைகத்திருவருளீந்தாள்பெரிய
தாயாகுஞ்சங்கரியார்தம்மிடத்தும்—ஓயாமல்

வானேத்துமாலயனைவாழத்தத்தம்வைப்பிற்
றுனேற்றுஞ்சண்முகனார்தம்மிடத்தும்—மான

வரம்பெற்றார்நல்லவளம்பெற்றாரொன்றுந்
திரம்பெற்றார்வண்மைச்சிறப்போ—டரம்பெற்றார்

மண்டலத்தையாள்சோழமன்னவர்தமன்னவனாற்
றண்டிகையைமுன்னேதரப்பெற்றார்—கொண்டல்செறி

தில்லைமாகாளிதிருத்தேரோடச்செய்திட்ட
தொல்லைமரபானொன்னுஞ்சொற்பெற்றார்—இல்லையென்று

சொல்லாமலேற்பவர்க்குத்தூய்மையொடுகேட்டவைகள்
எல்லாம்வழங்குமியல்புடையார்—எல்லாருந்

தீட்டுபுகழேலேலசிங்கன்றன்செல்வநிலை
நாட்டவுளத்தினயந்தருளி—நீட்டுகின்ற

நற்றலைகளீந்ததற்குநாடியவனல்கும்
பொற்றலைகள்வாங்காப்புகழுடையார்—கற்றவருக்

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 106

கேற்புடையாரொன்றேயிசைக்கின்றனவந்த
நூற்புடையாதேனுமொன்றுநோக்கிலரோ—ஏற்பவுரை
பொன்னேர்மதுரைப்புராணத்தையேனுமிவர்
என்னையறியாதிருந்தனரோ—மின்னேய்ந்த

கூர்வேற்கைப்பெம்மான்செங்குந்தர்தொழில்விளங்க
ஏர்வேட்கையோடுமெழுந்தருளிப்—பேர்வேட்கை
பாவோடுகின்றதெனப்பாவனையிற்செய்திடுமப்
பாவோடுமுற்சவமும்பார்த்திலரோ—தூவாய்மை

நற்குணச்செங்குந்தர்செய்யுநல்லநவவீரர்
உற்சவத்தைச்சற்றுமுணர்ந்திலரோ—சிற்பரன்சேர்
கச்சிதிருவானைக்காவருணைகாளத்தி
இச்சைதருந்தில்லையிடைமருதூர்—உச்சிதஞ்சேர்

மாகாளஞ்சாய்க்காடுமன்னும்விருத்தகிரி
சீகாழிவெண்காடுசெங்காடு—வாகார்
மதுரைதிருமாற்பேறுமாசகற்றையாறு
முதிர்புகழாரூர்முதலாந்—துதிபெறுசீர்

மன்னுஞ்சிவதலத்தும்வாய்த்தபரங்குன்றமொடு
பன்னுந்திருவேரகம்பழனி—மின்னுமுகிற்
சென்னிமலைதோகைமலைசீரார்விராலிமலை
மன்னுதிருச்செங்கோடுவண்போரூர்—துன்னுந்

தணிகாசலஞ்சீர்தருஞ்செந்திலாதி
அணியார்முருகனமரும்—மணியார்
தலத்துஞ்செங்குந்தர்தமதுமரபோங்கி
நிலத்துணெடுநாணிலைக்க—நலத்துடனே

நித்தியநைமித்தியங்கணேயமனங்களிப்பச்
சத்தியபத்தியொடுதாஞ்செய்து—நித்தியமும்
நாட்டுநவவீரர்நற்குலத்தாரொன்பதனைக்
காட்டுகின்றார்மற்றிஃதுங்கண்டிலரோ—நாட்டிலிவர்
வேதியர்கடம்மரபின்மேன்மைதனைக்கொள்ளிலவர்
தீதின்வலக்கையாசியைப்புரிந்தே—ஓதரிய

பொல்லாதசாபம்பொருத்துவரொன்றோவரசர்
மல்லார்மரபின்வளங்கொண்டால்—சொல்லாத

Digitized by RMRL

பாடுபடவைப்பரிந்தப்பாரிலிலைவணிகப்
பூடொன்றுமில்லாமற்போமென்றோ—தேடுபுகழ்க்
காராளர்தம்மரபின்காதையெமதென்னிலவர்
ஏருரப்பூட்டியுழுப்பவொன்றோ—போரார்ந்த
மெய்வழுத்துஞ்செட்டிமக்கண்மேன்மையெமதென்னிலவர்
வைதுதுலையால்வதைப்பவொன்றோ—மெய்தீர்
விருப்பாகக்கண்ணாளர்மேன்மையெமதென்றால்
இருப்பாணிநாவிடுவாரொன்றோ—தரைக்குள்வரு
தக்கதிலவணிகர்தஞ்சரிதைகொள்ளிலவர்
செக்கினுளேவைத்துச்சிதைப்பரன்றி—மைக்கடல்சூழ்
தொல்லுலகிற்பாலையத்தார்தோத்திரஞ்செய்சீர்த்திபெறு
நல்லதிறற்சில்நாய்க்கனுலையிலே—எல்லவர்க்கும்
அல்லல்விளைவித்ததுபோலவேயின்றுங்
கொல்லவகைதேடக்குறிப்பவொன்றோ—வல்லமைசேர்
வன்னியர்தந்தொன்மரபின்வண்மையெமதென்னிலவர்
சென்னிபிளவுபடச்செய்வவொன்றோ—உன்னியவவ்
சொன்மரபின்சீரொன்றுஞ்சூழ்ந்துகரவாமற்
றன்மைபெறுஞ்செங்குந்தர்தம்மரபின் — தொன்மைகொள்சீர்
தாங்கரந்தாரம்மவிவர்தங்கரவைநோக்குங்கால்
ஈங்குநகைப்பெய்தாதார்யாருளரோ—பாங்கின்முழுப்
பூசினிக்காயைச்சோற்றிற்போதமறைத்தாரென்றே
காசினியிற்சொல்வார்கதையொன்று—மாசுறவே
அக்கதைபோன்முக்கதையுண்டாமேற்பெருங்கரவாம்
இக்கதைக்குச்சற்றேயிணையாகும்—மிக்கபுகழ்க்
கைக்கொளரிலாவிடத்திற்காதைசொலல்வேண்டுமெனும்
தக்கமொழிசெவியிற்சார்ந்திலரோ—ஒக்கவிவர்
சென்றுவிளங்கானால்செய்ததனுக்கோர்பரிசாய்
ஒன்றுறவேசெங்குந்தரொண்மரபின்—நன்றி
இலைவணிகருக்கென்றெடுத்தோதக்கண்ட
நிலையுலகோர்நிட்டேரமாகச்—சொலவருமுன்
நண்டுகொழுத்தால்வளைக்குணண்ணாதெனுமதுபோற்
பண்டுபுதுவைப்பதியதனுள்—அண்டுங்

குமரப்பன்கோலக்கருணைசெட்டியென்னும்
அமருமிலைவணிகரானோர்—தமதுளத்திற்

பொங்குமகிழ்ந்துசென்னைப்போற்றுமகாநாட்டாரும்
தங்கியதேசாயிகளுந்தாரணியில்—எங்களைப்போல்

மேன்மைபெறவறியார்வீண்டலைமைமேவியதெப்
பான்மையெனப்பின்விளைதற்பாராமல்—நோன்மை

அராமுடிமேற்றங்குமிந்தவம்புவிக்காதாரத்
திராவிடதீபிகையிற்செப்பத்—தராதரந்தேர்

சென்னைப்பதிநாட்டார்சிறியிவர்தம்மை
மன்னுஞ்சபையில்வருவித்துத்—துன்னுபொய்ந்நூல்

செய்தீர்நுமரதற்குச்செம்மாந்துசூத்தாடிப்
பொய்தீரொஞ்சீர்மையெலாம்போற்றுது—வெய்தாகப்

பொங்கிவழிகின்றார்பொச்சாந்துமற்றவர்கள்
இங்கிவகைசொல்லற்கிடமும்மாற்—றங்கியதால்

என்னேநீர்கற்றதனையெங்கொளித்திரிவ்வாறு
கொன்னேகொடிமுடிந்துகொள்வதுதான்—சொன்னேம்

இயலன்றெனவுணர்ச்சியெய்தவியம்புஞ்
செயல்கண்டுநெஞ்சந்தியங்கிப்—பயமடைந்து

மெய்யொப்பஞ்செய்வோம்வெருளிவிடுகவென்றோர்
கையொப்பமிட்டுக்கனம்பெற்றார்—பொய்யொப்பும்

பொத்தடைந்தவப்பரிசுபோலேவரும்பரிசிங்
கெத்தனையோவின்னுமிவரெய்துவரொன்—றுய்த்துரைக்க

ஐயுறவுமில்லையிவராலேயிவர்மரபு
மெய்யுறவுமில்லைநலம்வேறில்லை—கையறைந்து

நோவுற்றார்போலப்பொய்ந்நூல்செய்துறுங்கீர்த்தி
மேவுற்றாரீதேவியப்பு.

கலிவெண்பா முற்றிற்று.

Digitized by RMRL

சிவமயம்.

சேனைத்தலைவர்

மரபுவிளக்கச் சூறுவளி.

ஸ்ரீகயிலாயத்தின்கண் அமரர்முதற் போகபூமியோர் வரையுமான பதினெண் கணத்தலைவர்களும் நந்தி-பிருங்கி-பிங்கிருடி முதலாகிய சிவகணத்தலைவர்களும் பணிந்து புகழப் பார்வதி சமேதராக அமர்ந்தருளிய பரமேஸ்வரர் தமது இளையபிள்ளையாராகிய சண்முகக்கடவுளுக்குச் சகோதரராகப் பார்வதியாரது பாதச்சிலம்பின்கணின்றுதிர்ந்த நவமணிகளிற்றோன்றிய நவசத்திகளிடத்தில் நந்திகேஸ்வரர் முதலாகிய சிவகணத்தலைவர்களையே அவதரிப்பிக்க, அவதாரஞ்செய்த வீரவாகுதேவர்முதலாகிய நவவீரர்களது சந்ததியார் கைக்கோளரொன்று சொல்லப்பட்ட செங்குந்தர்களென்று தொன்றுதொட்டு உலகத்தில் விளங்கி வருகின்றதை யாவரும் உள்ளங்கைக்கனி போல உணர்ந்திருக்கின்றனர்.

கலியுகாப்தவருடம் நாலாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்துநான்குக்குமேல் நிகழ்ந்த சோபகிருதுவருடம் ஆனிமாதத்தில் மூன்றுலகையும் மூன்றுனையின்மறைத்தற் கெண்ணுதல் போல ஓரெண்ணங் கொண்டு இங்ஙனம் இலவணிகருள் ஒருவராகிக் கல்வியிற் பயின்ற காஞ்சீபுரம் சபாபதிமுதலியரென்பவர், முற்கூறிய நவவீரர்கள் சந்ததியார் தம்மரபினரொன்று கலிவெண்பாவினாலும் வாக்கியத்தினாலும் கட்டுநூலொன்று தாமே செய்துகொண்டனர். இவர் கதிரவனைக் கண்ணாடியால் மறைத்து, உலகிற்கு இருள்வர நினைத்த ஒருவரையொப்பர்.

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 106

ஏனெனின் - தாமொருவாறு கட்டிய கட்டுநூலால் முன் உண்மைவிளங்க உணராத சிலரும் உணர்ந்துகொண்டாராதலின்.

பற்பலதேசத்து அரசர்களும் வணங்கித் திறைதர மநுநீதி வழாது தெய்வீகம்விளங்கச் செங்கோலோச்சிய குலோத்துங்கச்சோழமகாராஜனுடைய சிங்காதன திருச்சமுகத்தைச் சிறப்பிக்கும் வித்துவசிரோமணியாகிய கூத்தரென்னும் புலவர் விளங்கியகாலத்து, ஒருதினம் அக்காலத்திருந்த செங்குந்தத் தலைவர்கள் தங்கள்குலத்துக்கு ஓர் தீபம்போல விளங்கிய கூத்தரென்னும் புலவரைநோக்கி, எங்கள் மரபிற்கு மாணிக்க மணிபோற் கிடைத்த தமிழ்ப்புலவர் சிங்கமே! தொன்று தொட்டு விளங்கிவரும் நமது செங்குந்தர்மரபின் சீர்த்தியை ஓர் தமிழ் நூலாகச்செய்து தரல்வேண்டுமென்று கேட்க, அப் புலவர் நம்மரபின் சீர்மையை நாமே பாடுதலாகாதென்ன அதற்குச் செங்குந்தத்தலைவர் சம்மதியாமல் கோபங்கொண்டு அப்புலவரைக் கொல்லுதற்குத் துணிவுகொண்டு ஓடிவர, அதுகண்டு அவர் புவனைவீரன், பட்டணத்தில் ஓடிப்போய் சோமாசியாண்டா ரென்னும் அந்தணரிடத்தில் அடைக்கலம்புக, அந்தணர் மனமிரங்கிக் கல்வியிற் சிறந்த தனது ஏகபுத்திரனை ஓர் பேழைக்குள்வைத்து அப்புலவரென்றே சாதித்துப் பின்றொடர்ந்துவந்த செங்குந்தத்தலைவர்கள் வசத்திற் கொடுக்க அவர்கள் அப்பட்டணத்திற்கு வெளியிற்கொண்டுபோய்த் திறந்து பிராமணப்பிள்ளை உள்ளிருக்கக்கண்டு மிகவும் அதிசயப்பட்டு மீட்டுஞ் சோமாசியாண்டாரிடத்தில் வந்து கூத்தரென்னும் புலவரைக் கொல்லாதுவிடோமென்ன, அவ்வந்தணர் மிகவும் வருத்தமுற்று கூத்தரென்னும்புலவ ரனுமதியால் செங்குந்தத்தலைவரைநோக்கி உங்கள் மரபில் அறிவு அன்பு அழகுமுதலிய விசேடத்தன்மை வாய்ந்து தாய்க்குத் தனியராயும் தலைமை புத்திரராயு மிருக்கிற ஆயிரத்தெண்மர்களது தலைகளை அறுத்து அவைகளால் ஓர் சிரச்சிங்காதன மிடுவீர்களாயின் அதன்

Digitized by RMRL

மேலிருந்து இப்புலவர் உங்கள் எண்ணப்படி செய்வாரென் றுரைக்க, அவ்வாறே அகமும் முகமும் மலர்ந்து ஆயிரத்தெண் மர்கள் சிரங்களை அறுத்துச் சிரச்சிங்காதனமிட, அதன்மே லிருந்து குலோத்துங்கச் சோழமகாராஜனும் இராஜசபையி லிருந்த அந்தணர்முதலிய நான்கு வருணத்தாருங் கண்ணும் மனமும் களிப்பக்கண் டிருக்கவும் வானோர் மலர்மாரிபெய்து மகிழ்ச்சியடையவும் ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தை உலகுள்ளளவும் ஓங்கச்செய்து ; பின்பு அவ்வாயிரத் தெங்ச மர்தலைகளும் அவ்வவர் உடலிலே ஒட்டி உயிர்பெற்றெழ எழுப்பெழுபதென்னும் ஓர்பிரபந்தமுஞ்செய்து அறிவுடையோ ரால் ஒட்டக்கூத்தரென்னும் காரணப்பெயரைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

அவரதுகீர்த்தி இக்காலத்தும் கற்றவராலும் மற்றவராலும் சொல்லப்படுகின்றதைச் சிறிதேனும் இவர் கருத்துட் கொண் டவரானல் எவ்வாறு இவ்வாறுசெய்யத் துணிவர்.

ஸ்ரீ கயிலாயபரம்பரையாரென்றும், உபசுப்பிரமணியமரபி னரென்றும், நவவீரர் சந்ததியாரென்றும், சேனைத்தலைவ ரெ ன்றும், தில்லைமாகாளித்தேரோடச் செய்தவரென்றும், சோழ மகா ராஜனல் தண்டிகை பெற்றோரென்றும், வல்லானது வன் மையையழித்து அவன்மனைவிக்கு மாங்கலியப்பிச்சை இட்டவ ரென்றும், ஏலேல சிங்கனுக்கு மெய்த்தலை கொடுத்தவரென்று ம், இன்னும் பலவித சிறப்புடையோரென்றும் சொல்லப்படுகிற செங்குந்தர் மரபின் பெருமை; மேற்கூறிய ஈட்டியெழுபது எழுப்பெழுபது என்னும் பிரபந்தங்களிற் பிரமாணிக்கப்பட் டிருக்கிறதுமன்றி செங்குந்தர்புராணம், மதுரைப்புராணம், பிள்ளைத்தமிழ், கோவை, உலா, பரணி, ஊசல், வல்லான் கா வியம், மாலை, திருப்புகழ்முதலாகிய நூல்களினும் ஐயமறக் காட்டப்பட் டிருக்கின்றது.

இவைகளில் ஒன்றும்பார்த் துணர்ந்திராராயினும் செங்குந்தர் தங்கட்குச் சிவசண்முகக்கடவுள் சகோதரபாவனையாய் எழுந்தருளிக் கிருபைசெய்கிற பாவோடும் உற்சவம் வீரவாகுதேவர் உற்சவம் வருடந்தோறும் நடத்துவதையும், சிதம்பரம் காஞ்சிபுரம் திருத்தணிகை முதலாகிய சிவஸ்தலங்களினும் சுப்பிரமணியர் ஸ்தலங்களினும் தொன்றுதொட்டு மரபுவிளங்க நித்தியநைமித்திய பூசைகள் செய்விக்கின்றதையும், காட்சிப் பிரமாணத்தால் இவர் உண்மைவிளங்கக் கண்டும் விபரீதநூல் செய்துகொண்டதற்குக் காரணம்; இவர்க்கு அக்காலத்துள் நேரிட்ட மதிமயக்கமென்றே தோன்றுகின்றது.

சேனைத்தலைவர் மரபுவிளக்கச்சூருவளி

முற்றிற்று.

Digitized by RMRL